**போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி (கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்திக்கான சாத்தியவள ஆய்வுக்கான ஆலோசனை சேவை) செயற்திட்டம்- 2020**

போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி (கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்திக்கான சாத்தியவள ஆய்வுக்கான ஆலோசனை சேவை) செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஒக்தோபர் 28 ஆம் திகதிய 3425-எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட உடன்படிக்கை மற்றும் செயற்திட்ட நிர்வாக கைநூல் என்பவற்றின் பிரகாரம், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் முன்னுரிமை போக்குவரத்து செயற்திட்டங்களின் தயார்நிலையை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளதுடன் கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது தேசிய துறைமுக பிரதான திட்டத்தை பின்பற்றி துறைமுக வசதிகளின் அபிவிருத்திக்கான தயார்படுத்தலிற்கு ஆதரவளிக்கின்றது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், இணங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை எஸ்டிஆர் 17.47 மில்லியனாக உள்ளதுடன் செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் பிரகாரம் இக் கூறின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 729.65 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5 மில்லியனானதுடன் அதில் ரூபா 645.01 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 4.42 மில்லியன் தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2016 ஒக்தோபர் 28 ஆம் திகதியிலிருந்து மூன்று மாதங்களின் பின்னர் ஆரம்பிக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட போதிலும் கூறின் நடவடிக்கைகள் 2018 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்கீட்டுக் குறைபாடு | தொகை ரூபா | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2020 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்திற்கு கடனை வழங்குவது தொடர்பான வட்டிச் செலவினம் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்பட்டிருக்கவில்லை. | ஜீஓஎஸ்எல் மற்றும் ஏடிபீ இடையேயான கடன் உடன்படிக்கையின் பிரகாரம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் (ரீஓடி) மூலம் வட்டி உள்ளடங்கலான மீள்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் வட்டிச் செலவினங்கள் செயற்திட்டத்தால் இனங்காணப்படுவதில்லை. | இக் கூறுடன் தொடர்புடைய வட்டி செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | தொழில்நுட்ப உதவி கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் (குறிப்பிட்ட உறுதிப்பாடுகள்) 4.01 ஆம் பிரிவு | 2016 ஒக்தோபரில் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போதிலும் செயற்திட்ட நடவடிக்கைகள் 2018 இல் தொடங்கப்பட்டன. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்வுக்கான ஆலோசனை சேவை 2020 ஆம் ஆண்டின் 2 ஆம் காலாண்டில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும் ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தம் 2020 பெப்ரவரி 24 இல் வழங்கப்பட்டது. இதன் விளைவாக | கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான சாத்தியவள ஆய்வுக்காக ஆலோசனைச் சேவை இனங்காணப்பட்டதுடன் விரிவான ஏடிபீ மற்றும் சர்வதேச கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்ட பின்னர் ஏஈசீஓஎம் இற்கு வழங்கப்பட்டது.<br><br>உடன்படிக்கையின் அறிக்கையிடல் | பொறுப்புகளை நிர்ணயிப்பதன் மூலம் செயற்திட்டத்தின் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு விரிவான திட்டமொன்று செயற்திட்ட முகாமைத்துவ பிரிவால் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயற்திட்டத்தின் செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதில் தாமதம் காணப்பட்டது. | தேவைப்பாட்டின் பிரகாரம் வரைவு சாத்தியவள ஆய்வு அறிக்கையானது வழங்கப்பட்டதிலிருந்து 13 மாதங்களின் பின்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. | |
| (ஆ) | கடன் உடன்படிக்கையின் 4.03(அ)(v) ஆம் பிரிவு மற்றும் செயற்திட்ட உடன்படிக்கையின் 2.09(v) ஆம் பிரிவு | 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 யூன் 21 இலேயே கணக்காய்விற்கு அனுப்பப்பட்டன. செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் போதுமான காலப்பகுதியினுள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக, 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் அங்கீகரிக்கும் செயன்முறையில் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளது. | நிதியாண்டு முடிவடைந்து இரண்டு மாதங்களுக்குள் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் அனுப்பப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| **கூறு** | **2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | **கணக்காய்வு விடயம்** | **தாமதத்திற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|
| | **எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல்**<br>**சதவீதம்** | **அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல்**<br>**சதவீதம்** | | |
| தொடக்க அறிக்கை<br>இடைக்கால அறிக்கை<br>வரைவு சுற்றாடல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கை | 100 | 100<br><br>0 | -<br>-<br>பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய கொவிட்-19 தொற்றுநோயால் ஆகும். |
| வரைவு சாத்தியவள ஆய்வு அறிக்கை | 75 | 0 | | |

**முகாமைத்துவத்தின் பதில்** நாட்டில் நிலவிய கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக, 2020 யூன் 10 முதல் 2020 நவம்பர் 16 வரை செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் பௌதீக செயன்முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஆலோசனை சேவைக்கான ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வு நிதியாண்டினுள் மூன்று ஆலோசனை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் வரைவு சுற்றாடல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கை 2020 திசெம்பர் 31 வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 மார்ச் மாதத்தில் நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக திட்டமிட்டவாறு ஆலோசனைப் பணிகளை மேற்கொள்வது கடினமாக இருந்தது.<br><br>கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக ஆய்வுக்காக இடைநிறுத்தப்பட்ட காலம் 2020 யூன் முதல் குழுத் தலைவர்கள் இலங்கைக்கு வந்து செயற்திட்டத்தைத் தொடரும் வரையான 2020 நவம்பர் வரையாகும். நாளதுவரையாக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டம் செயற்பட்டு வருகின்றது. | செயற்திட்டத்தின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அறிக்கையிடல் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆலோசனை சேவைக்கான ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் இறுதி ஆரம்ப அறிக்கை மற்றும் இடைக்கால அறிக்கை என்பன முறையே மூன்று வாரங்கள் மற்றும் எட்டு வாரங்களுக்குள் வாடிக்கையாளருக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் வரைவு அறிக்கைகள் மாத்திரமே வாடிக்கையாளருக்கு இணங்கப்பட்ட காலப்பகுதியினுள் அனுப்பப்பட்டன. மேலும், வரைவு அறிக்கையின் அடிப்படையில் ஆலோசகருக்கு மைல்கல் (milestone) கொடுப்பனவுகள் விடுவிக்கப்பட்டன. | எஸ்எல்பிஏ மற்றும் ஏடிபீ இடமிருந்து சமர்ப்பிக்கப்பட்ட வரைவு ஆரம்ப மற்றும் இடைக்கால அறிக்கைகளுக்காக கருத்துக்கள் எதுவும் காணப்படாததால் அவை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்கிணங்க உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகள் விடுவிக்கப்பட்டன. மேலும், இறுதி ஆரம்ப மற்றும் இடைக்கால அறிக்கைகள் தற்போது பெறப்பட்டுள்ளன. | இணங்கப்பட்ட காலப்பகுதியினுள் இறுதி அறிக்கைகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் கீழ் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ரூபா 180 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டில் ரூபா 21.9 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டது. | இச் செயற்திட்டம் 2020 யூன் முதல் 2020 நவம்பர் வரை இடைநிறுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டதுடன் பட்டியலின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உண்மையில் ஆண்டின் போது செய்யக்கூடிய செயற்பாடுகளைக் கருத்தில் கொண்டு வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்

செயற்திட்டத்தின் 13 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் செயற்திட்டத்தின் செயலாற்றலில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும் 10 வெற்றிடங்கள் காணப்பட்டன.

### 3.5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான பொறுப்புகளை நிர்ணயிப்பதன் மூலம் செயற்பாடுகள், இலக்கு காலப்பகுதி, பௌதீக மற்றும் நிதி இலக்குகள் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் விரிவான செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு இணங்கப்பட்டது. | மீளாய்வாண்டிற்கான இலக்குகள் மற்றும் அடைதல்களை அளவிடுவதற்கு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்திற்காக தனியான வங்கி கணக்கு ஒன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் பெறுமதி சேர் வரி கொடுப்பனவிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ஜீஓஎஸ்எல் நிதிகளானது இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் வங்கிக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பொது திறைசேரியால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஜீஓஎஸ்எல் செலவினங்களுக்காக நடைமுறைக் கணக்கொன்றைத் திறப்பதற்கான தேவைப்பாடு காணப்படவில்லை. ஏனெனில் இச் செலவினங்கள் ஆலோசனை சேவைகள் மற்றும் வற் கொடுப்பனவுகளுக்காக மாத்திரமே ஏற்பட்டிருந்தன. ஆகையால் துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சு இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் (எஸ்எல்பீஏ) சார்பில் காசோலைகளை வழங்கியிருந்தது. | ஜீஓஎஸ்எல் செலவினங்களை மேற்கொள்வதற்கு செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு சொந்தமான தனியான நடைமுறைக் கணக்கை திறப்பது சிறந்ததாகும். |